**தலைப்பு 201 – பௌத்த அலுவல்கள் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பௌத்த அலுவல்கள் திணைக்களத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் பௌத்த அலுவல்கள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 மே 03 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 மே 03 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பௌத்த அலுவல்கள் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் கணக்கீட்டு உத்தியோகத்தரும் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.
துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்குவதாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் சுட்டிக்காண்பிக்கப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருதுரைகள்

### 1.6.1 நிதி நிலைமைக் கூற்று

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் கணக்கிலெடுக்கப்பட்ட போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முன்னைய வருடத்திற்கான பொருட்கள் கணக்கீட்டு அறிக்கை மூலம் நீக்கப்படுவதற்காகப் பரிந்துரைக்கப்பட்டிருந்த மரத்தளபாட உபகரணங்கள் , கணனி உபகரணங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் ஆகிய 38 பொருட்களுக்கான கிரயம் இனங் காணப்பட்டு நிதிக் கூற்றுக்களில் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் மிகுதியில் குறைத்துக் காட்டப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | இவ் வருடத்திற்குள் விரைவில் நீக்கப்படுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பொருட் கணிப்பீட்டுச் சபையின் பரிந்துரைகளை செயற்படுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | முலத்தியன பியதாஸ ரத்நாயக்க அனுஸ்மரண சில்மாதா பயிற்சி நிறுவக கட்டட நிர்மாணத்திற்காககச் செலவிடப்பட்ட ரூபா 8.22 மில்லியன் நடைமுறை வேலைகளாக நிதிக் கூற்றுக்களில் வெளிக்காட்டப்படவில்லை. | முலத்தியன பியதாஸ ரத்நாயக்க அனுஸ்மரண சில்மாதா கட்டட நிர்மாணத்திற்காக ஒதுக்கங்கள் மாத்தறை மாவட்டச் செயலகத்திற்கு அனுப்பப்பட்டிருந்தது. மாவட்டச் செயலக செலவுகள் கணக்கிடப் பட்டபோது நடைமுறை வேலைகளாக CIGAS வேலைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்ததுடன் 2020 ஆம் வருடத்தில் அது நிலையான சொத்து ஒன்றாக கணக்கிடப்பட்டுள்ளது. | குறித்த பெறுமதி நடைமுறை வேலையாக வெளிக் காட்டப்படுதல் வேண்:டும். |

**1.6.2 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை.**

திணைக்களத்தினால் கீழே காட்டப்படுகின்ற பதிவேடுகள் பேணப்படாமையுடன் ஏனைய பதிவேடுகள் முறையாக மற்றும் நாளதுவரையாக்கப்பட்டு பேணப்படாமை மாதிரிக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக்கள் பதிவேடு | | |
| | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றிக்கை/ நிதிப்பிரமாணம் 502(2) இன் 11 ஆவது அத்தியாயத்தின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளது வரையாக்கப்படவில்லை. | நாளது வரையாக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை மற்றும் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நிலையான சொத்துப் பதிவேடு பேணப்படல் வேண்டும். |
| (ஆ) | பெறப்படுகின்ற காசோலைகள், காசுக்கட்டளைகள் ன்பவற்றுக்கான பதிவேடு | | |
| | நிதிப்பிரமாணம் 451 இன் பிரகாரம் காசோலைகள் , காசுக்கட்டளைகள் பதிவேடொன்று பேணப்படவில்லை. | அவதானிக்கப்பட்டதன் படி பேணப்படுவதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | நிதிப்பிரமாணத்தின் படி பிரகாரம் பதிவேடொன்று பேணப்படல் வேண்டும். |

(இ) பிணைப் பதிவேடு

| | | |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 891(1) இன் பிரகாரம் பிணை வைக்கப்பட வேண்டிய அலுவலர்கள் மற்றும் ஊழியர்களின் தகவல்களை உள்ளடக்கி பிணைப் பதிவேடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பேணப்படுவதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் பிணைப் பதிவேடொன்று பேணப்படல் வேண்டும். |

(ஈ) மின் உபகரணங்கள் தொடர்பான பதிவேடு.

| | | |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 454(2) இன் பிரகாரம் மின் உபகரணங்கள் தொடர்பான பதிவேடொன்று பேணப்படவில்லை. | அவதானிப்பின் பிரகாரம் பேணப்படுவதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் பொருட் பதிவேட்டுப் புத்தகமொன்று பேணப்படல் வேண்டும். |

(உ) இழப்புக்கள் தொடர்பான பதிவேடு.

| | | |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 110 இன் பிரகாரம் இழப்புக்கள் தொடர்பான பதிவேடொன்று பேணப்படவில்லை. | இழப்புக்கள காணப்படாமையினால் இழப்புக்கள் தொடர்பான பதிவேடொன்று பேணப்படவில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் இழப்புக்கள் தொடர்பான பதிவேடொன்று பேணப்படல் வேண்டும். |

(ஊ) வாகன லொக் புத்தகம்.

| | | |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 1645(அ) பிரகாரம் வாகன லொக் புத்தகம் நாளது வரையாக்கப்பட்டு பேணப்படவில்லை. | நாளது வரையாக்கப்படுவதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் வாகன லொக் புத்தகம் ஒவ்வொரு வாகனம் தொடர்பாகவும் வேணப்படல் வேண்டும். |

2. நிதி மீளாய்வு

2.1 செலவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) மதிப்பீடு தயாரிப்பதிலான செயற்திறனின்மை. | | |
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் திணைக்களத்திற்கான மதிப்பீடு தயாரிக்கும் போது முடிந்தளவிற்கு சரியாகத் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் 5 செலவு விடயங்களுக்கான ஆரம்ப மற்றும் திருத்திய செலவு மதிப்பீட்டின் இடையே முரண்கள் நூற்றுக்கு 52 சதவீதத்திலிருந்து நூற்றுக்கு 1700 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | கொவிட் - 19 தொற்று நிலைமை காரணமாகத் செலவுகள் உயர்வடைந்தமை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) ஒதுக்கங்கள் பயன்படுத்தப்படல். | | |
| திணைக்களத்திற்கான ரூபா 1,503,100,000 ஆன தேறிய ஒதுக்கத்தில் ரூபா 266,527,409 ஆன ஒதுக்கங்கள் சேமிக்கப்பட்டிருந்ததுடன் அது நூற்றுக்கு 17.7 சதவீதமாகும். அச் சேமிப்பில் 02 மீண்டெழும் விடயங்கள் மற்றும் 02 மூலதன விடயங்கள் என்பவற்றுக்குகாக ரூபா 212,475,000 ஆன மொத்த ஒதுக்கங்களும் சேமிக்கப்பட்டிருந்ததுடன் 12 மீண்டெழும் செலவு விடயங்கள் மற்றும் 03 மூலதனச் செலவு விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 201,900,000 ஆன ஒதுக்கங்கள் நூற்றுக்கு 9 வீதத்திலிருந்து நூற்றுக்கு 99 விதம் வரையான | மதிப்பிடப்பட்ட செலவுகள் ஏற்படாமை , கொவிட் 19 காரணமாக அலுவலகம் மூடப்பட்டிருந்தமை, நி.பி 66 இற்குரிய ஒதுக்கங்கள் மாற்றல் பத்திரங்கள் அனுமதிக்கப்பட்டபோது பெறுகைச் செயற்பாடுகளுக்கான கால அளவு போதியளவில் இல்லாமை. | சரியாகச் செலவு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு ஒதுக்கங்கள் ஏற்பாடு செய்யப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| வீச்சிற்கு உட்பட்டு ரூபா 25,174,779 ஆன ஒதுக்கங்கள் சேமிக்கப்பட்டிருந்தது. | | |
| (இ) நி.பி 66 இன் கீழ் மாற்றப்பட்ட ஒதுக்கங்களின் சேமிப்புக்கள் | | |
| வருடாந்த மதிப்பீட்டு ஒதுக்கங்கள் போதியளவு இல்லாதிருந்தமையால் நி.பி 66 இன் கீழ் 2 செலவு விடயங்களுக்காக மாற்றப்பட்ட ரூபா 3,450,000 ஆன ஒதுக்கங்களில் நூற்றுக்கு 88 வீதத்திலிருந்து நூற்றுக்கு 100 வரையான வீச்சில் சேமிப்புக்கள் காணப்பட்டது. | நி.பி 66 இன் பிரகாரம் ஒதுக்கங்கள் மாற்றப்படுவதற்கான மாற்றல் பத்திரங்கள் அனுமதிக்கப்பட்ட போது பெறுகைச் செயற்பாடுகளுக்கான போதியளவு காலமொன்று காணப்படவில்லை. | மதிப்பிடப்பட்ட ஒதுக்கங்களின் அளவு போதாமை உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர் ஒதுக்கங்கள் மாற்றப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2.2 முற்பணக் கணக்கு மிகுதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சேவையிலிருந்து விலகிச் சென்ற இரண்டு உத்தியோகத்தர்களின் 2020 திசெம்பர் 31 திகதியில் அறவிடப்பட இருந்த 01 வருடம் தொடக்கம் 03 வருடங்களான காலப்பகுதிக்கான மொத்தம் ரூபா 262,686 ஆன கடன் மிகுதி மற்றும் ஓய்வூதியம் பெற்றுக் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய 2 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 13.950 ஆன கடன் மிகுதி என்பன அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | சேவையிலிருந்து விலகிச் சென்ற இரு உத்தியோகத்தர்களுக்கான பிணையாளர் இல்லாமையால் அது சம்பந்தப்பட்ட சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான செயற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டு வருவதுடன் மற்றும் ஓய்வூதியம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்கள் ஓய்வூதியச் சம்பள கோவைகளை தயாரிப்பதற்காக உத்தியோகத்தர்களினால் குறிப்பிட்ட ஆவணங்கள் வழங்கப்படாது இருந்தமை. | கடன் மிகுதியை தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

மாதிரிக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே விபரமாகக் காட்டப்படுகின்றது.

| | அவதானிப்புக்கள் | | | |
|---|---|---|---|---|
| | **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமைகள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **பரிந்துரைகள்** |
| (அ) | இலங்கை சனநாயகச் சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 104(4) | நட்ட இழப்பீடுகள் ஏற்பட்ட தினத்திலிருந்து 03 மாதங்களுக்குள் முழு அறிக்கையொன்று சமர்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2020 ஆம் வருடத்தில் செப்டெம்பர் மற்றும் நவம்பர் மாதங்களில் விபத்துக்குள்ளான 2 வாகனங்கள் தொடர்பாக முழு அறிக்கை சமர்பிக்கப்படவில்லை. திருத்தங்களுக்காக ரூபா 142,550 ஆன கிரயம் ஏற்பட்டது. | கொவிட் தொற்று நோய் நிலைமையினால் அலுவலக நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படாமையினால் குறிப்பிட்ட பரிசோதனை விரைவில் செய்யப்படும். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 3(1) ஆம் பந்தி | சுகல எரிபொருள் பரிசோதனைக்குப் பின்னரும் 12 மாதகாலப்பகுதியின் பின்னர் அல்லது 25,000 கிலோ மீற்றர் தூரமளவு ஓடியதன் பின்னர் அல்லது எனஜின் தொடர்பான முக்கிய திருத்த வேலைகளின் பின்னர் போன்ற காரணங்களில் முதலில் அமையும் சந்தர்ப்பத்தின் பின்னர் மீண்டும் எரிபொருள் பரிசோதனை செய்யப்பட வேண்டிய போதிலும் 5 வாகனங்களுக்கான எரிபொருள் பரிசோதனையொன்று செய்யப்படவில்லை. | 05 வாகனங்களுக்கான எரிபொருள் பரிசோதனை எதிர் காலங்களில் செய்யப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் கிடைக்கப் பெறாமை.

களனி, ஈரியவெட்டிய தசசில் மாதா பயிற்சி நிறுவக நிர்மாணம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின்போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 74.96 மில்லியன் செலவிடப்பட்டு களனி ஈரிய வெட்டியில் நிர்மாணிக்கப்படுகின்ற தசசில் மாதா மூலஸ்தானம் மற்றும் பயிற்சி நிறுவகத்தின் நிர்மாண நடவடிக்கைகள் முடிக்கப்பட்டு திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டு 6 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்த போதிலும் பயிற்சி செயற்திட்டம் நடாத்தப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | 2014 ஆம் வருடத்தில் நிர்மாண நடவடிக்கைகள் முடிவடைந்து கையளிக்கப்பட்ட போதிலும் 2019 ஆம் வருடம் வரையில் கட்டிடத்தின் பல்வேறு நிர்மாண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமை மற்றும் பயிற்சி நடவடிக்கைகளுக்காக விரிவுரையாளர்களை ஆட்சேர்ப்பு செய்தல், மாணவப் பிக்குணிகளை ஆட்சேர்ப்பு செய்தல போன்ற நடவடிக்கைகள் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் கோவிட் . 19 தொற்றுநோய் ஏற்பட்ட காரணத்தால் செயற் திட்டத்தை ஆரம்பிக்க முடியாமை. | குறிப்பிட்ட நோக்கத்தை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | மேலே (அ) பந்தியில் குறிப்பிட்டப்பட்ட நிறுவகம் நிர்மாணிக்கப்பட்டிருந்த காணி 2012 ஆம் வருடத்தில் திணைக்களத்திற்கு கையளிக்கப்படுவதற்கு கௌரவ வெலமிட்டியாவெ குசலதம்ம நாயக தேரரின் இணக்கப்பாடு பிரதேச செயலாளருக்குத் தெரிவிக்கப்பட்டு 8 வருடத்திற்கும் மேற்பட்ட காலம் கடந்த போதிலும் இற்றை வரையில் அவ்வாறான கைப்பற்றல் நடவடிக்கை முடிக்கப்பட்டு சட்டபூர்வ உரிமை உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | காணியைக் கையேற்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | காணியை கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| திணைக்களத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 852 என்பதுடன் 2020 திசெம்பர் 31 இல் வெற்றிடங்களின் எண்ணிக்கை 88 ஆகும். அதில் பௌத்த அலுவல்கள் ஒருங்கிணைப்பாளர் பதவிக்கான 41 மற்றும் அபிவிருத்தி உதவியாளர் பதவிக்கான 16 வெற்றிடங்கள் பல வருடங்களாக காணப்பட்டு வருவதுடன் அவ் வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | பௌத்த அலுவல்கள் ஒருங்கிணைப்பாளர் பதவிகளில் வெற்றிடங்கள் காணப்படுவது வடமேல் மாகாணங்களில் என்பதால் அப் பிரதேசங்களுக்கு இணைக்கப்படுவதற்கு அலுவலர்களைக் கண்டு பிடித்தல் கடினமான செயல் என்பதுடன் அபிவிருத்தி உதவியாளர் பதவி, அபிவிருத்தி ,அலுவலர்களாக சேவைப் பிரமாணம் மாற்றப்பட்டு பொது நிர்வாக அமைச்சினால் ஆட்சேர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | தேவையான வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |